**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. NO. 30/2024**
**PW5**

| | | |
|---|---|---|
| Name | : | வெங்கடேசன் |
| Father's/Husband's Name | : | மண்ணு |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.06.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது போளூர் தாலுக்கா, பூங்கொல்லைமேடு கிரமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.12.2022 அன்று மாலை 05.45 மணிக்கு நான் எனது கழனியில் இருந்தபோது தங்கதுரை மணிகண்டனை அடித்து விட்டார் என்று கேள்விப்பட்டேன். மறுநாள் நான் சம்பவ இடத்திற்கு காலை 10.45 மணிக்கு சென்றேன். அப்போது போளூர் போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு விசாரித்துகொண்டிருந்தார்கள். அப்போது என்னுடன் கமலக்கண்ணன் இருந்தார். போலிசார் ஒரு பார்வை மகசரும் வரைபடமும் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் நானும் கமலக்கண்ணனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் தான் அன்று போலிசார் தயார் செய்தது. அது அ.சா.ஆ.2. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

சம்பவத்தை பற்றி யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியாது. ஊரில் பேசிக்கொண்டார்கள். சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது. பார்வை மகசர் தயார் செய்தபோது அந்த இடத்தில் சுமார் 5 நபர்கள் இருந்தார்கள். நான் எதிரி தங்கதுரையின் மாமனாரின் பங்காளி ஆவேன். பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டது என்று படித்து காட்டினார்கள். முதலில் கமலக்கண்ணன் கையொப்பம் செய்தார். பிறகு நான் கையொப்பம் செய்தேன். எங்கள் இருவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்து அங்கு எங்களிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நானும் கமலக்கண்ணனும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், எங்கள் முன்னிலையில் பார்வைமகசர் மற்றும் வரைபடம்

தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/-. B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.